**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No. 80/2021**
**Deposition of witness of Plaintiff – P.W.1(மருதுபாண்டி)**
**29.7.2024**

**7ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

**1ம் பிரதிவாதி** கணபதியின் மனைவி மஞ்சுளா உயிருடன் உள்ளார் என்றால் சரிதான். எனது அப்பா உலகநாதனுடன் பிறந்தவர்கள் மாரியம்மாள், அமராவதி என்றால் சரிதான். அவர்களை வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. உரிய தரப்பினரை சேர்க்காத தோசத்தால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதி கணபதி பெயரில் சட்டப்படியான ஆவணங்கள் மூலம் ஏற்பட்டிருந்தது என்றும் அந்த ஆவணங்களை முறையாக பார்த்து தான் 7ம் பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. முருகனுக்கு பாத்தியப்பட்ட சொத்தை விற்பனை செய்ய இறந்து போன 1ம் பிரதிவாதி கணபதிக்கு சட்டப்படி உரிமை உள்ளது என்றால் சரியல்ல. 7ம் பிரதிவாதியால் கிரையம் வாங்கப்பட்ட சொத்துக்கள் நான் வழக்குரையில் சொல்லியுள்ளது போல் பூர்வீக சொத்துக்கள் அல்ல என்றால் சரியல்ல. இறந்துபோன 1ம் பிரதிவாதி கணபதிக்கு அவரது மனைவி 8ம் பிரதிவாதி மஞ்சுளாவை தவிர வேறு வாரிசுகள் இல்லை என்றால் சரிதான். 7ம் பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ள சொத்தை பொறுத்து நான் சட்டப்படி எவ்வித பாக உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல. 7ம் பரிதிவாதியை பொருத்து எனது வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

8ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

எனது பெரியப்பாவிற்கு எதிராக பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் பூர்வீக சொத்து என்ற அடிப்படையில் பாகம் கேட்கிறேனா அல்லது எனது அப்பா மற்றும் பெரியப்பாவிற்கு பாத்தியப்பட்ட கூட்டு குடும்ப சொத்து என்ற அடிப்படையில் பாகம் கேட்கிறேனா என்றால் 1,2 அயிட்ட சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் ஆகும். 3 முதல் 7 வரை உள்ள சொத்துக்கள் பெயரளவிற்கு எனது தாத்தா பெயரில் எனது அப்பாவும் எனது பெரியப்பாவும் கிரையம் வாங்கிய சொத்துக்கள் ஆகும். மேற்படி விவரத்தை வழக்குரை மற்றும் நிரூபனவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தாவா சொத்து மேலூர் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் மதியநல்லூரில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். எனது அம்மாவை திருமணம் செய்த பிறகு எனது அப்பா மதியநல்லூரில் குடியிருந்து வந்தார் என்றால் 30,35

ஆண்டுகளாக மதியநல்லூரில் குடியிருந்தார். நாங்கள் மேலூரில் வசித்தோம் என்பதற்கு எனது பெயரிலோ எனது தகப்பனார் பெயரிலோ ஆவணம்எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா மட்டும் உள்ளது. எனது அப்பா மதியநல்லூரில் கல்குவாரியில் வேலை பார்த்தார் என்றால் விவசாய கூலி வேலை பார்த்தார். 1ம் பிரதிவாதியுடன் எனது அப்பா தாவா சொத்துக்களை கூட்டு அனுபவம் செய்துவந்தார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து எனது அப்பாவின் கையெழுத்தா என்றால் இல்லை.

**8ம் பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது**